RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1336

OPEN ACCESS

# நற்றிணை நெய்தல் பாடலில் காப்பிய மரபு

**ம. இராதா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம்-606001 தமிழ்நாடு, இந்தியா

# The Epic Tradition in the Song Natrinai

**M. Radha** [a, *]

[a] Department of Tamil, Thiru Kolanjiappar Government Arts College, Vriddhachalam-606001, Tamil Nadu, India

* Corresponding Author: radhaaadhav21113@gmail.com

Received: 20-06-2022
Revised: 20-08-2022
Accepted: 05-09-2022
Published: 21-11-2022

Check for updates

**ABSTRACT**

The reason for the pride and richness of a language is due to the grammar and literature that have emerged in the eyes of that language. The epics occupy a significant place in those verses. Homer's Iliad and Odyssey, considered to be the oldest epics in the world, have also been written in accordance with the epic tradition of that language. Indian language epics are also written within the epic tradition of the regional languages. These include the five great and minor epics that have appeared in the Tamil language; the Kamba Ramayanam, the Periyapuranam, etc. However, if we examine whether the Sangam literature, viz., the songs and the thokai, falls within the epic tradition, the Agam and Puram songs contain at least a few of the epic traditions of the Dandiya author. It can be seen that the majority of the epic elements have been matched in the Kalitthokai and the Pathuppaattu Songs. This study is intended to examine how the epic traditions have adapted to the song that has been taken up for the subject matter of the study. In particular, this study has revealed whether the epic grammar of the Dandiya author has been followed.

**Keywords:** Epic Traditions, Thokai, Natrinai, Sangam literature

## முன்னுரை

உலகில் பழமையான மொழிகளின் அடையாளமாக விளங்குவது காப்பியமாகும். தனிமனித வாழ்வை முன்னிலைப்படுத்தி சமூக வாழ்வைக் கட்டமைக்கும் இலக்கியக் கூறுகளில் காப்பியங்கள் தனித்து முன்னிற்கின்றன. ஓர் இனத்தின் பண்பாட்டைத் தன்னுள்ளே பொதிந்து வைத்து அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு சேர்க்கும் வரலாற்றுக் கருவூலமாகக் காப்பியங்கள் விளங்குகின்றன. காப்பியங்கள் பெரும்பாலும் வீரயுக காலத்தில் தோன்றி காலந்தோறும் தம்மை வளர்த்துக் கொண்டு பேரிலக்கியங்களாகத் தம்மை நிலைப்படுத்திக் கொண்டுள்ளன. அவ்வாறு நிலைப்படுத்திக் கொண்ட இலக்கியங்கள் தமக்கெனத் தனித்த மரபினையும் மரபுத் தொடர்ச்சியையும் கொண்டு விளங்குகின்றன. சங்க காலத்தில் வழக்கிலிருந்த தனிப்பாடல் மரபு வாழ்வின் ஒரு கூறை வெளிப்படுத்தின. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தேவைகள் வாழ்வின் முழு நிகழ்வையும் சொல்லும் பெரும்பாடல் மரபினைத் தோற்றுவித்தன. அவ்வகையில் நற்றிணை நெய்தல் பாடலில் காப்பிய மரபினைப் பின்பற்றிய பாங்கினை அறியும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## காப்பியம் - அறிஞர்கள் விளக்கம்

நீண்ட கதை சொல்லும் மரபினைக் கொண்டவை காப்பியங்களாகும். அவை இரண்டு வகைப்படும். அவையாவன சொற்றொடர் நிலைச் செய்யுள், பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்ற இரண்டு வகைமைகளாகும்.

"காப்பியம் என்னும் சொல் 'காவ்ய' என்ற வடமொழிச் சொல்லின் திரிபாகும். கவி என்பது கவிஞனையும், செய்யுளையும் குறிக்கும். கவியால் இயற்றப்படுவது காவியம் என்பது வடமொழி மரபாகும். காவியம் படைக்கும் நெறி வடமொழியில் முதலில் தோன்றியது. அதனைத் தொடர்ந்து தமிழிலும் காப்பியங்கள் படைக்கப் பெற்றன. மிகப்பழமை வாய்ந்த சங்க இலக்கியங்களிலும் காப்பியம் என்ற சொல் இடம்பெறவில்லை. காப்பிய படைப்பிற்கான விதிமுறைகள் தொல்காப்பியத்திலும் காணப்பெறவில்லை". எனவே, காவியம் என்பது வடமொழி மரபைப் பின்பற்றித் தமிழ்மொழியில் படைக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது (Subbaiyah, 2007).

"உடல் வலிமையும், அழகும், ஆளுமையும், வீரமும், பேராண்மையும், ஈகைப் பண்பும் மிக்க ஒருவனை அக்கால மக்கள் வியந்து பாராட்டிப் புகழ்ந்தனர். போற்றத்தக்க அவனுடைய பண்புகளைப் பாடல்களில் புகழ்ந்து பாடலாயினர். நாளடைவில் அப்பாடல்கள் கதை வடிவில் வளர்ச்சியுற்றன. முடிவில் அவையே காப்பியப் பாடல்களாக உருப்பெற்றன" என்று கூறுகின்றார் (Gnanamoorthy, 2002).

காப்பியங்கள் பல தலைமுறைகளாக உயர்ந்தது என்பதை "காப்பிய இலக்கியம் பல தலைமுறைகளில் படிப்படியாகச் செம்மைப்படுத்தப்பட்டதாகும். பொதுவாக வழக்கிலிருந்த பழமையான கவிதைகளிலிருந்தும் பக்தி, கையறுநிலை, இயன்மொழி ஆகியவைகளைப் பொருளாகக் கொண்ட பாடல்களிலிருந்தும் காப்பியம் வளர்ச்சி எய்தியதாகும்" என்று டபிள்யூ. பி. கெர் கூறுவதாக தா.ஏ. ஞானமூர்த்தி குறிப்பிடுகின்றார் (Gnanamoorthy, 2002). எனவே, தனிமனித பண்புகளைப் பொதுமைப்படுத்திக் கூறும் இலக்கிய வகைமையாகக் காப்பியங்கள் காணப்படுகின்றன. காப்பியத்தின் சிறப்பினைக் கூறும் கி.வா. ஜகந்நாதன், 'இன்பம் தோன்ற நிற்பது மனைவியின் உரைக்கு ஒப்பாகும் காவியமேயாகும்' என்று கூறுகிறார் (Jagannathan, 2009). எனவே, காப்பியங்கள் இனிய மொழிகளைப் பேசும் மனைவியின் உரைக்கு ஒப்பான இன்பத்தைப் பயக்கக் கூடியது என்பதை அறிய முடிகிறது.

## காப்பியங்களின் வகை

காப்பியத்தைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என்று இருவகைப்படுத்தலாம். தண்டியலங்கார ஆசிரியர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் கூறுவது பெருங்காப்பியம். அந்நான்கினுள் ஒன்றோ, பலவோ கூறப்படாமல் இருப்பது காப்பியம் ஆகும் என்பதை,

"அறமுதல் நான்கினும் குறைபாடுடையது

காப்பியம் என்று கருதப் படுமே" (Subramaniya Desigar, 1992)

"பெருங்காப் பியகாப் பியமெனும் பெற்றித்தால்

சுருங்காப் பொருட்டொடரும் சொல்லிற் பொருந்தவற்றுள்

ஒன்றும் பலவும் பொருளிற் குறைவுறுமேல்

என்று மதுகாப் பியம்"

என்று கூறுகின்றனர் (Jagannathan, 2009).

எனவே அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் தன்னுள்ளே விளக்கமாகக் கொண்டிருப்பது பெருங்காப்பியம் எனவும், அவற்றுள் ஏதேனும் ஒன்று குறைந்து காணப்பட்டால் அவை சிறுகாப்பியம் என்றும் வரையறுத்துள்ளனர்.

"தமிழில் புராணத்தையும் காப்பிய வகைகளில் சேர்ப்பர்".

தமிழ் மரபில் தொடர்நிலைச் செய்யுட்களைக் காப்பியங்கள் என்று கருதும் போக்கு உள்ளதால் புராணங்களையும் அவ்வாறே கூறினர் என்பதை அறியமுடிகிறது (Jagannathan, 2009).

## பெருங்காப்பிய இலக்கணம்

இலக்கியங்கள் காலம்தோறும் புதிதுபுதிதாகத் தோன்றும் இயல்புடையனவாகும். எனவே, இலக்கியத்திற்கான வரையறைகளும் இலக்கணங்களும் தோன்றுவது மரபாகும். அவ்வகையில் பெருங்காப்பியத்திற்கான வரையறைக் கூறும் தண்டியலங்கார ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

“பெருங்காப் பியநிலை பேசுங் காலை

வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின் ஒன்று

ஏற்புடைத் தாகி முன்வர இயன்று

நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகித்

தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்

மலைகடல் நாடு வளநகர் பருவம்

இருசுடர் தோற்றம்என் றினையன புனைந்து

நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்

பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்

தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்

புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தல் என்று

இன்னன புனைந்த நன்னடைத் தாகி

மந்திரம் தூது செலவிகல் வென்றி

சந்தியிற் றொடர்ந்து சருக்கம் இலம்பகம்

பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி

நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்

கற்றோர் புனையும் பெற்றிய தென்ப”

தண்டியலங்கார ஆசிரியரின் கூற்றுப்படி, 'காப்பியங்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்கள் சுட்டப்பட வேண்டும் (Subramaniya Desigar, 1992). காவியத்தின் தொடக்கத்தில் வாழ்த்து, வணக்கம், வருபொருளுரைத்தல் அமைய வேண்டும். காவியத் தலைவன் தன்னிகரில்லாதவனாகக் காட்டப்பட வேண்டும். மலை, கடல், நாடு, வளநகர் ஆகியவற்றின் சிறப்புகளும் வருணனைகளும் குறிக்கப்பட வேண்டும். ஞாயிறு, திங்கள் எனும் இரு சுடர்களின் வர்ணனைகள் இடம்பெற வேண்டும். கதைத் தலைவனின் திருமண நிகழ்ச்சி, உள்ளப் புணர்ச்சி, பூம்பொழில் நுகர்தல், முடிசூட்டுதல், புனல் விளையாடல், மதுவருந்தி களித்தல், புதல்வரைப் பெறுதல், ஊடல் கொள்ளுதல், கலவியிற் கலித்தல், மந்திரம், தூது, செலவு, இகல், வெற்றி ஆகியவை இடம்பெற்றிருக்க வேண்டும். சந்தியில் தொடர்ந்து சருக்கம், இலம்பகம் எனும் பிரிவுகளில் செய்யுட்கள் அமைய வேண்டும். நன்மையை நோக்கி காவியம் வளர வேடும். எண்வகை சுவைகளும் கவிஞனின் மனமெய்ப்பாடுகளும் சொல்லப்படுவனவாக பெருங்காப்பியம் அமைய வேண்டும்' என்கிறார்.

மேற்கண்ட இலக்கணக் கோட்பாடுகளுக்குட்பட்ட காப்பிய மரபு சங்க இலக்கிய நற்றிணைப் பாடலில் எவ்வாறு பின்பற்றப்பட்டுள்ளது என்பதை அறிய முற்படுவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

“சேய்விசும் பிவர்ந்த செழுங்கதிர் மண்டிலம்

மால் வரை மறைய துறை புலம்பின்றே

இறவி அருந்தி எழுந்த கருங் கால் வெண்குருகு

கருங்கோட்டுப் புன்னை இறை கொண்டனவே

கணைக் கால் மாமலர் காப்ப மல்குகழித்

துணைச் சுறா வழங்கலும் வழங்கும் ஆயிடை

எல்லிமிழ் பனிக்கடல் மல்கு சுடர்க் கொளீஇ

எமரும் வேட்டம் புக்கனர் அதனால்

தங்கின் எவனோ தெய்ய பொங்குபிசிர்

முழவிசைப் புணரி எழுதரும்

உடைகடற் படப்பையெம் உறைவின் ஊர்க்கே”

பகற்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி வரைவுகடாவும் கூற்றமைந்த பாடலுக்குப் பின்வருமாறு உரை விளக்கம் கூறியுள்ளார் (Narayanasamy, 2007).

நெய்தல் திணை ஒழுக்கத்தில் அமைந்த இப்பாடலில் துறை, மக்கள் இயக்கம் இன்மையால் தனிமைப்பட்டது. அத்தனிமையில் ஆறலைப்போரால் வரும் இடையூறு ஏற்படக்கூடும் எனத் தோழி எச்சரிக்கின்றாள். குருகுகள் மனையிலே தங்கியதொப்பத் தலைவனையும் தங்கிச் செல்ல வேண்டுவதன்வழி வரைவு கடாவுகின்றாள். இப்பாடலில் காப்பிய மரபிற்கான இலக்கணக் கூறுகள் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காணலாம்.

## இருசுடர்

காப்பிய இலக்கணங்களில் மிகவும் இன்றியமையாதது இருசுடர்த் தோற்றமாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகளுக்கும் நிலமும், பொழுதும் முதற்பொருளாகும். இத்தகைய நில வருணனைகளில் இருசுடர் தோற்றம், மறைவு ஆகியவை முதன்மை பெறுகின்றன.

“இருசுடர் தோற்றம் என்பது சூரிய சந்திரர்களின் உதயமாகும். பெரும்பான்மையான காப்பியங்களில் இவ்விரண்டோடு இரு சுடரின் மறைவும் புனைந்து உரைக்கப்படும். சூரியனது அத்தமனமும், சந்திரனது உதயமும் அடுத்தடுத்தே வருணிக்கப்பெறும். மாலைக்கால வருணனையில் இவ்விரண்டும் அமையும்”. எனவே, குறிப்பிட்ட நிலத்தினை உணர்த்தவும், சூழலை உணர்த்தவும் இருசுடர் பற்றிய வருணனைகள் இடம்பெறுகின்றன (Jagannathan, 2009). நெய்தல் திணையின் பொழுதுகளாக,

“எற்பாடு

நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்” (Ilampuranar, 2005)

சூரியன் மறைகின்றபொழுது நெய்தல் திணைக்குக் காலமாகும். இதனை,

“சேய் விசும்பு இவர்ந்த செழுங் கதிர் மண்டிலம்

மால் வரை மறைய”

மிகத் தொலைவில் வானத்தில் ஏறிவந்த செழுமையான கதிர்களைக் கொண்ட சூரிய மண்டிலம் பெரிய மலையினூடே சென்று மறைதலால் கடல் துறை தனிமைப்பட்டது என்பதில் சூரியனின் மறையும் மாலைக்காலம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. காப்பிய மரபில் இருசுடர் பற்றிய கோட்பாடு அக இலக்கியங்களில் காலத்தையும், சூழலையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன (Narayanasamy, 2007).

## கடல்

காப்பிய இலக்கணங்களில் கடல் பற்றிய வருணனைகள் மிகவும் சிறப்புடையதாகும். கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் நிலத்திற்கு உரியனவாகும். இத்தகைய கடல் சார்ந்த நெய்தல் நில வருணனைகளை அக இலக்கியங்கள் வாழ்வியலின் ஊடாக எடுத்தியம்புகின்றன.

“கடல் வருணனை கம்பராமாயணத்திலுள்ள கடல்தாவு படலம், கடல்காண் படலம் என்பவற்றில் உள்ளது” (Jagannathan, 2009).

கடல் சார்ந்த நெய்தல் நில வாழ்வியலை அக இலக்கியங்கள் வல்லிதின் விரித்துரைப்பின் அவை காப்பிய மரபில் தனித்த படலமாக வருணிக்கப்பட்டுள்ளன. இதனை நற்றிணைப் பாடல், “துறை புலம்பின்றே” என்று குறிப்பிடுகின்றது. மாலைக் காலத்தில் மக்கள் இயக்கம் இன்மையால் கடல்துறை தனிமையில் புலம்புகின்றது என்பதில் மாலைநேரத்துக் கடலின் துன்பத்தை உணரமுடிகின்றது (Narayanasamy, 2007).

## கருப்பொருள்

அக இலக்கியங்களில் நாட்டின் வளத்தைக் குறிப்பதற்கும், அக மாந்தர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதற்கும் கருப்பொருள்கள் கருவியாக அமைகின்றன. காப்பிய மரபில் கருப்பொருள்கள் தனித்து இயங்கும் தன்மை அற்றவையாகக் காணப்படினும் அவை மனித வளத்தைக் குறிக்கும் குறியீடாக அமைகின்றது. சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களில் காடுகள், பறவைகள், விலங்குகள் ஆகியவை பற்றிய தனித்த வருணனைகள் காணப்பட்டாலும் அவை நாட்டின் வளத்தையும், கொடுமையையும் மனிதவாழ்வின் ஊடாகக் குறிக்கும் குறியீடாக அமைகின்றது.

“இறவு அருந்தி எழுந்த கருங் கால் வெண் குருகு

வெண் குவட்டு அருஞ் சிறைத் தாஅய்”

இறாமீனைத் தின்று எழுந்த கரிய காலையுடைய வெண்மையான நாரைகள் வெண்மையான உப்புக்குவட்டின் மேலாக அரிய சிறகை வீசிப் பறந்து சென்று கரையில் உள்ள கருமையான கிளைகளைக் கொண்ட புன்னை மரங்களில் தங்கின என்பதிலிருந்து நெய்தல் நிலம் வறுமையற்ற நிலமாகவும் பல்லுயிர்களும் பசியின்றி வாழும் நிலமாகவும் சித்தரிக்கப்பட்டதன் மூலம் காப்பிய மரபில் வரையறுக்கப்பட்டிருக்கும் நாட்டு வளத்தைப் புலப்படுத்துவதாகக் காணப்படுகின்றது (Narayanasamy, 2007).

## நாட்டு வளம்

காப்பியங்களின் சுவையைக் கூட்டுவது நாட்டுச் சிறப்பாகும். வளமுள்ள நாட்டில் செல்வம் பெருகும், இன்பம் பெருகும், அறம் ஓங்கும். ஆகவே, தமிழ்க் காப்பியங்களில் நாட்டுவளம் வெகுவாகப் போற்றப்படுகின்றது.

நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு என்னும் உறுப்புகளுக்கு நாளடைவில் பெருமை மிகுதியாயிற்று. தலபுராண காப்பியங்களுக்குள்ளே பழையனவற்றில் நாடு நகரச் சிறப்புகள் இரா. பிற்காலத்தில் புராணங்களை இயற்றவந்த புலவர் பெருமக்கள் அவ்விரண்டையும் விரிவாக அமைத்தனர்.

எனவே, நாடு நகர வருணனைகள் பிற்காலத்தில் இலக்கியங்களில் அதிகமாகக் கையாளப்பட்டாலும் அவை காப்பிய உத்தியாகப் பயன்பட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது.

“கணைக் கால் மாமலர் கரப்ப மல்கு கழித்

துணைச் சுறா வழங்கலும் வழங்கும்”

நெய்தலின் கரிய மலர் மறையும்படியாக உப்பங்கழியில் நீர் பெருகும். அக்கழிகளில் தம் துணையோடு சுறாமீன் இயங்கும் என்பதிலிருந்து நாட்டு மக்கள் மட்டுமின்றி நெய்தல் நில

நாட்டுயிர்களும் வளமாக வாழ்ந்துள்ளன என்பதை அறியமுடிகின்றது. எனவே, காப்பிய மரபில் நாட்டு வளம் அகப்பாடலில் தெளிவாகப் பதியப்பட்டுள்ளது (Narayanasamy, 2007).

## தொழில்

நாட்டு வளத்தின் மிக முக்கிய அங்கமாகத் திகழ்வது தொழில் வளமாகும். கடலும் கடல்சார்ந்த நெய்தல் நிலத்தில் மீன்பிடித்தல் முக்கிய தொழிலாகும். உப்பு காய்ச்சுதல் அதனைப் பிற நிலங்களுக்குக் கொண்டு சென்று விற்பது நெய்தல் நில மக்களின் அடிப்படைத் தொழிலாகும். இதனால் வருடம் முழுவதும் தொழில் சிறந்து விளங்கியது.

“எல்இமிழ் பனிக் கடல் மல்கு சுடர்க் கொளீஇ

எமரும் வேட்டம் புக்கனர்”

இரவில் ஓசை உண்டாக்கும் குளிர்ந்த கடலில் பல விளக்குகளைக் கொண்டு எம் சுற்றத்தாரும் மீன் வேட்டையின் பொருட்டு கடலிற் சென்றுவிட்டனர் என்பதிலிருந்து மீன்பிடித் தொழில் வளம் சிறந்து விளங்கியதை அறியமுடிகின்றது. மேலும், காவிய இலக்கணத்திற்குட்பட்டு நாடு நகர் வர்ணனை கூறுகள் அக இலக்கியங்களில் காணப்படுகின்றன என்பதை அறியலாம் (Narayanasamy, 2007).

## தன்னேரில்லாத் தலைமை

காப்பிய இலக்கணத்துள் கதைத் தலைவன் தன்னேரில்லாத் தலைமைப் பண்பு கொண்டவனாகக் காணப்பட வேண்டும் என்று தண்டியலங்கார ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஆனால் சங்க அகமரபில் தலைவன், தலைவியின் உயர் குணங்கள் கூறப்பட்டுள்ளதன்றி அவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு குறிப்பிட்டால் அது அகமரபற்று புறமரபைச் சார்ந்ததாக எண்ணப்பெறும். அகமரபு பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர்,

“மக்கள் நுதலிய அகனைந் திணையும்

சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்”

என்று குறிப்பிடுகின்றா (Ilampuranar, 2005)

எனவே, அகமரபில் தலைவன், தலைவியின் பெயர்களைக் குறிப்பிடக்கூடாது என்ற மரபை அறியும் வேளையில்,

“புறத்திணை மருங்கின் பொருந்தல் அல்லது

அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே”

எனவே, அகமனத்தால் ஒன்றிய தலைவனும், தலைவியும் உணர்வால் ஒன்றுபட்டுள்ளனர் (Ilampuranar, 2006)

தலைவனது இரவுப் பயணத்தில் அவனுக்கு ஏதேனும் ஆபத்து நிகழ்ந்து விடுமோ என்ற அச்சத்தில் தலைவியின் உள்ளக் கருத்தை அறிந்த தோழி தலைவனிடம் அறிவுறுத்துகின்றாள். இந்நிகழ்வு தலைவனை நேசிக்கும் தலைவனின் தன்னேரில்லாத் தலைமையும் தலைவன், தலைவி வாழ்வை நேசிக்கும் தோழியின் தன்னேரில்லாத் தலைமையும் உணர்த்துகின்றது எனலாம். அக இலக்கிய மாந்தர்கள் பெயர்கள் சுட்டப் பெறாத நிலையில் இருவரின் உணர்வுகளும் ஒன்றிக் கலந்து தன்னேரில்லாத் தலைமை குணத்தை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்றது. பிற்காலத்தில் தனியுடைமைச் சமுதாயத்தில் உருப்பெற்ற காப்பிய மாந்தர்களின் குணங்கள் விதந்தோதப்பட்ட நிலையில் காப்பிய இலக்கணத்தை வரையறுத்த தண்டியாசிரியர் தலைவனைத் தனித்தும், தலைவியைத் தனித்தும் தன்னேரில்லாத் தலைமாந்தர்களாக வரையறுத்துள்ளார்.

## முடிவுரை

காவியங்கள் மனைவியின் உரைக்கு ஒப்பான இன்பத்தை நல்கக் கூடியவை. தனிமனிதரின் வாழ்வைப் பொதுமைப்படுத்தி சமூகப்படுத்தும் பணியினைக் காப்பியங்கள் செய்கின்றன. மரபுகளை வலிந்தும், இயல்பாகவும் ஏற்கும் வரலாற்று ஆவணமாகக் காப்பியங்கள் திகழ்கின்றன. தண்டியலங்கார ஆசிரியரின் காப்பியம் பற்றிய வரையறைகள் அக இலக்கியங்களில் சிறு கூறாக இடம் பெற்றுள்ளன. அவ்வாறு இடம் பெற்றதற்கு அடிப்படைக் காரணம், அகப்பாடல்கள் பெரும்பாடலாக இல்லாமல் தனிப்பாடலாக வடிக்கப்பெற்றதே எனலாம். காப்பிய மரபில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருட்களை உறுதிப் பொருட்களாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே அடிப்படையாகும். ஆனால், அகப்பாடல்கள் இன்பத்தை வலிந்தும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை ஊடுபாவாகவும் முன்வைக்கின்றன. தனிப்பாடல்களில் ஒரு காப்பியத்திற்கான முழு அளவுகோலையும் உள்ளடக்க இயலாது. எனினும் சிறுகாப்பியத்திற்கான ஆதிவிதை என்று கருதமுடிகின்றது. சங்க அகப்பாடல்கள் முழுமையையும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும்பொழுது பெருங்காப்பியத்திற்கான அனைத்துக் கூறுகளையும் கொண்டுள்ளதை அறிய முடியும்.

## References


Gnanamoorthy, T.A. (2002) Ilakkiya Thiranaaiviyal, Yaazh Publishers, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Jagannathan, K.V. (1975) Tamil Kappiyangal, Amutha Nilaiyam, Chennai, India.

Narayanasamy Iyer, A. (2007) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Subbaiyah, A. (2007) Ilakiya Thiranaivu Isangal, Kolgaikal, Paavai Veeliyeedu, Chennai, India.

Subramaniya Desigar, (1992) Thandiyalangaram, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License